அலகு: 03. சைவ விழுமியங்கள்

01. சைவ விழுமியம் என்றால் என்ன?

……………………………………………………………………………………………………………………………...

02. ஒருவரின் மேலான இலட்சியமாக சைவம் எதனைக் கூறுகிறது?

……………………………………………………………………………………………………………………………...

03. நாம் பின்பற்றவேண்டிய சைவ விழுமியங்களாக குறிப்பிடப்படுவன எவை?

……………………………………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………………………………...

04. அன்பு என்பதன் பொருள் யாது?

……………………………………………………………………………………………………………………………...

05. அருள் எனச் சிறப்பாகக் கூறப்படுவது யாது?

……………………………………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………………………………...

06. சீவகாருண்யத்தை வலியுறுத்திக் கூறும் சிவனின் கதை யாது?

……………………………………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………………………………...

07. சைவம் அன்பை எவ்வாறு கருதுகிறது?

……………………………………………………………………………………………………………………………...

08. திருமூலர் அன்பு பற்றி யாது கூறுகிறார்?

……………………………………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………………………………...

09. திருமூலர் எழுதிய நூல் எது?

……………………………………………………………………………………………………………………………...

10. தனு, கரண, புவன, போகங்களை இறைவன் படைக்க காரணம் யாதென சைவசித்தாந்தம் கூறுகிறது?

……………………………………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………………………………...

11. உடல் எமக்கு கிடைக்க காரணம் யாதென திருவள்ளுவர் கூறுகிறார்?

……………………………………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………………………………...

12. பகைவரிடத்தில் ஒருவர் நிகழ்த்தும் பாவகாரியங்கள் எவை?

……………………………………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………………………………...

13. பரஸ்பர அன்பினால் கிடைக்கும் நன்மைகள் எவை?

………………………………………………………………………………………………………...

………………………………………………………………………………………………………...

………………………………………………………………………………………………………...

14. உயர்ந்த தவமாக கருதப்படுவது யாது?

………………………………………………………………………………………………………...

15. பாரதியார் தவம் பற்றி தன் நெஞ்சுக்கு உரைக்கும் மொழி யாது?

………………………………………………………………………………………………………...

………………………………………………………………………………………………………...

………………………………………………………………………………………………………...

16. வள்ளுவர் வாய்மை பற்றி யாது கூறுகிறார்?

………………………………………………………………………………………………………...

………………………………………………………………………………………………………...

17. ஒரு பொய்மை எப்போது வாய்மையாக மாறக்கூடியது என வள்ளுவர் கூறுகிறார்?

………………………………………………………………………………………………………...

………………………………………………………………………………………………………...

18. உண்மை பேசுபவர்களின் உயர்வு பற்றி வள்ளுவர் யாது கூறுகிறார்?

………………………………………………………………………………………………………...

………………………………………………………………………………………………………...

19. பொய்மை பேசுபவர்கள் அடையும் இழிவு யாது?

………………………………………………………………………………………………………...

………………………………………………………………………………………………………...

20. 'சத்தியமேவ ஜயதே' எனும் வேத வாக்கியத்தின் பொருள் யாது?

………………………………………………………………………………………………………...

21. உபநிடதம் உண்மை பேசு என்பதை வலியுறுத்திக் கூறும் கூற்று யாது?

………………………………………………………………………………………………………...

22. மஹாத்மா காந்தி நின்றொழுகிய வழி யாது?

………………………………………………………………………………………………………...

23. அரிச்சந்திர மகாராஜாவின் கதை உணர்த்தும் படிப்பினைகள் எவை?

………………………………………………………………………………………………………...

………………………………………………………………………………………………………...

………………………………………………………………………………………………………...

24. நவீன யுகத்து அரிச்சந்திரன் எனப் போற்றப்படுபவர் யார்?

………………………………………………………………………………………………………...

25. பாடசாலையில் மாணவர்கள் பின்பற்றக்கூடிய விழுயங்கள் 03 தருக.

………………………………………………………………………………………………………...

………………………………………………………………………………………………………...

………………………………………………………………………………………………………...

# “அலகுப் பரீட்சை 03இற்கான விடைகள்”

01. சைவசமயம் வலியுறுத்துகின்ற மேலான பண்புகள் - குணங்கள் சைவ விழுமியங்களாகும்.
02. உயிர்களின் ஆன்ம விடுதலை.
03. அன்புடைமை, வாய்மை, செய்ந்நன்றி மறவாமை
    பணிவுடைமை, அடக்கம்
04. ஒருவர் தன்னோடு தொடர்புடையவர்களிடத்தே காட்டுகின்ற ஈடுபாடு - அன்பு.
05. தொடர்பில்லாதவர்களிடம் நாம் காட்டும் அன்பு - அருள்.
06. சிவபிரான் பன்றிக் குட்டிகளுக்குப் பால்கொடுத்த கதை.
07. கடவுளாக.
08. உயிர்களிடம் அன்பு வைப்பவன் தெய்வநிலை எய்திவிடுகிறான் - திருமூலர்.
09. திருமந்திரம்.
10. அன்பே வடிவான இறைவன், அறியாமையுள் மூள்கியுள்ள உயிர்களை அறியாமையிலிருந்து நீக்கி, பேரின்பத்தைக் கொடுப்பதற்காக.
11. ஒருவரோடு ஒருவர் அன்பு பாராட்டுவதற்காகவே எலும்பு, தசை, தோலுடன் கூடிய உடலை நாம் பெறுகிறோம்.
12. கோபம், கடுஞ்சொற் பேசுதல், கொலை
    புறங் கூறுதல், பொய் பேசுதல்
13. துன்பம் ஏற்படும்போது பிறர் துணைக்கு வருவர்.
    பிறர் காட்டும் அக்கறையால் பெரும் துன்பம் நீங்கும்.
    எங்கும் எதிலும் இன்பம் நிகழும்.
14. பிறரிடம் அன்பு காட்டுதல்.
15. பெற விரும்புபவற்றை உலகில் பெற, வையத்தில் அன்பில் சிறந்த தவம் இல்லை, அன்புடையவர்கள் வாழ்வில் இயல்பாக இன்புற்று வாழ்வர்.
16. யாருக்கும் எவ்வகையிலும் தீமை பயக்காதவற்றைப் பேசுவதே வாய்மை - வள்ளுவர்.
17. ஒரு பொய்மையினால் நன்மை உண்டாகுமானால் அந்தப் பொய்மையும் வாய்மையாகவே கொள்ளத்தக்கது.
18. அகத் தூய்மையுடையவராக திகழ்வர், உலகத்தாரால் மதிக்கப்படுவார்
    தவம், தானம் செய்பவர்களைவிட உண்மை பேசுபவர்கள் உயர்வை அடைவர்.
19. நன்மைகள் எதையும் அனுபவிக்கமாட்டார், பாவம் செய்தவராகி இறை தண்டனைக்கு உள்ளாவர்
    அவரின் மனசாட்சியே அவனே வருத்தும்
20. சத்தியம் ஒன்றே வெல்லும்
21. சத்தியம் வத
22. அஹிம்சாவழி
23. வாய்மையை அறமாகப் பேணுதல் வேண்டும்.
    வாய்மை பேசுவதால் துன்பத்திற்கு ஆளானாலும் ஈற்றில் இறையருள் கிட்டும்.
24. மஹாத்மா காந்தி.
25. பாடசாலையில் ஆற்றவேண்டிய கடமைகளை சரியாக செய்தல் வேண்டும்.
    பெரியோருக்கு மதிப்பளித்தல் வேண்டும்.
    அனைவருடனும் அன்புடன் பழகுதல் வேண்டும்.
    கற்றலில், ஏனைய ஆக்கபூர்வமான விடையங்களில் ஈடுபடல் வேண்டும்.
    ஒழுக்க விழுமியங்களை முறைப்படி கற்று ஒழுகுதல் வேண்டும்.